**பள்ளேபொள பிரதேச சபை**

**மாத்தளை மாவட்டம்**

---

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பள்ளேபொல பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருக்கின்றது. இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பள்ளேபொல பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வங்கியில் வைப்புச் செய்யப்படாத ரூபா 1,101,435 பெறுமதியான 04 காசோலைகள் மற்றும் ரூபா 9,390 காசு மீதியொன்றை கையிலுள்ள காசாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை ஐந்தொகைக் குறிப்பில் உத்தியோகத்தர்களின் கையிலுள்ள காசாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 06 காணிகளுக்குரிய பெறுமதியான ரூபா 428,000 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளுராட்சி மன்ற ஓய்வூதிய நிதியத்தின் பங்களிப்பாக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 672,569 தொகை பொறுப்பாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ரூபா 32,377 ஆன ஊழியர் பிணை மீதியை நாளது வரையாக்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 2,564,565 ஆன தீர்க்கப்படாத செலவினத்திற்காக நிர்மாணம் மற்றும் நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பெருந்தெருக்கள் திணைக்களத்தின் நிதிஏற்பாட்டின் கீழ் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்ப்பில் இருந்த மாதிபொல வீதி மீளமைப்பு நிர்மாண வேலைக்காக ரூபா 852,771 தொகை நிர்மாணம் கடன்கொடுத்தோரின் கீழ் 2009 ஆம் ஆண்டிலிருந்து காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நிதிஏற்பாடு கிடைக்கப்பெறாமை அடிப்படையில் அந்நிர்மாண வேலை நிறைவேற்றப்படாதிருந்ததுடன், அதனை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

02 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,972,663 ஆக இருந்ததுடன், பட்டோலைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 37,201,221 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,113,794 ஆக இருந்தது.

**1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை**

(அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 1,439,957 ஆக இருந்தது.

(ஆ) கணக்காய்வுக்காக தகவல் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் மொத்தம் ரூபா2,251,132 இற்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**1.3.5 இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்று டனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | |
| (i) 132(ஏ) ஆம் பிரிவு | சமூக ஏற்றுக் கொள்ளல் தொடர்பாக அல்லது பொது முக்கியத்துவம் உடைய யாதேனுமொரு நிகழ்வு அல்லது சந்தர்ப்பம் தொடர்பாக விழாக்களை நடாத்துவது தொடர்பாக ஒரு ஆண்டில் மொத்தம் ரூபா ஆயிரத்தைத் தாண்டாத செலவினம் ஒன்று, மற்றும் அமைச்சரின் கடிதம் மூலம் முன் அங்கீகாரத்துடன் அச் செயற்பாடுகளுக்காக செலவிட முடியுமான போதிலும், அவ்வாறான அங்கீகாரம் இன்றி, 06 சந்தர்ப்பங்களில் ரூபா 40,656 செலவிடப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) 170 ஆம் பிரிவு | தலைவரின் அங்கீகாரம் இன்றி, மீளாய்வாண்டில் விடயங்களுக்கிடையே ரூபா 335,378 நிதி ஏற்பாடு மாற்றீடு செய்யப்பட்டிருந்தது. |

(இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக் கோவை

---

| | |
|---|---|
| (i) 99 ஆம் விதி | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளும் தலைவரினால் அல்லது அவ்வாறு சான்றுறுதிப்படுத்துவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால் உப தலைவரினால் மேற்கொள்ள முடியுமான போதிலும், ரூபா 11,233 பெறுமதியான 05 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவ்வாறு சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 115 ஆம் விதி மற்றும் நி.பி 237(ஆ) பிரிவு | கொள்வனவு செய்யப்பட்ட களஞ்சியப் பொருட்கள் கிடைத்தமை மற்றும் இருப்புப் புத்தகத்தில் பதியப்பட்டமை சான்றிதழ் ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமாயினும், 2010 திசெம்பர் 31 ஆம் திகதிய 1267 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 77,130 பெறுமதியுடைய களஞ்சியசாலைக்குப் பொருட்கள் கிடைப்பதற்கு முன்பு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iii) 208 ஆம் விதி | களஞ்சியப்பொருட்கள் விநியோகம் முடியுமான அளவு பொது போட்டித் தன்மையுடன் மேற்கொள்ள வேண்டியதுடன், உரிய சேவையின் பெறுமதி ரூபா 50,000 விட அதிகமாயின், நாளேடுகளில் உரிய விளம்பரம் பிரசுரிக்கப்பட வேண்டுமாயினும், ரூபா |

74,600 பெறுமதியான டயர் கொள்வனவு தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், உரிய கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்

---

21 ஆம் பிரிவு

அங்கீகரிக்கப்பட்ட வீட்டு நிர்மாணம் தொடர்பாக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட 53 கட்டட விண்ணப்பங்கள் 05 தொடர்பாகவும், முன்னைய ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட 46 கட்டட விண்ணப்பங்களில் 02 தொடர்பாகவும் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்ததுடன், எஞ்சிய விண்ணப்பங்கள் தொடர்பாக பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம்

---

153ஆம் பிரிவு

ரூபா 50,000 இற்கு மேற்பட்ட கொள்வனவுகளின் 5% ஆன பிடித்து வைத்தல் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும், ரூபா 77,130 பெறுமதியான மின் உபகரணங்களின் கொள்வனவிற்காக ரூபா 3,856 வரி கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப்பிரமாணம் நி.பி 1646

பிரதேச சபை வசமுள்ள முச்சக்கர வண்டியினதும் டிராக்டரினதும் கை உழவு

இயந்திரத்தினதும் ஓட்டப்பதிவேடுகள் முறையே 09, 04 மற்றும் 12 மாதங்களாக ஓட்டப் பதிவேடுகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஊ) 2001 யூலை 17 ஆம் திகதிய 01/2001 ஆம் இலக்க மாகாண இறைவரி ஆணையாளரின் சுற்றறிக்கை 03:1

எழுதுகருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக மொத்த விற்பனைப் பெறுமதியில் 1% விற்பனை வரி அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்ப வேண்டிய போதிலும் ரூபா 75,208 ஆன எழுதுகருவிகள் கொள்வனவிற்காக ரூபா 752 ஆன விற்பனை வரி அறவிடப்பட்டு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(எ) 2006 யூன் 09 ஆம் திகதிய மமா/உம/ஆ/சு/2006/3/1 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை

தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்காக 06 அரை நாளுக்காக இணைந்த படி மற்றும் 200 மைல்களுக்கு உயர் எல்லையில் மோட்டார் சைக்கிள்களுக்காக மைல் கட்டணம் செலுத்த முடியுமான போதிலும், அதற்கு மேலதிகமாக ரூபா 1,313 கொடுப்பனவு அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,574,428 ஆக இருந்ததுடன் அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,162,499 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2010 மதிப்பிடப்பட்ட | 2010 உள்ளவாறான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பிடப்பட்ட | 2009 உள்ளவாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) வீதவரியும் வரியும் | 301 | 319 | 267 | 270 | 231 | 39 |
| (ii) வாடகை | 407 | 387 | 10 | 505 | 427 | 78 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணம் | 511 | 559 | 10 | 551 | 440 | 111 |
| (iv) ஏனைய வருமானம் | 15,555 | 16,203 | 4,604 | 2,176 | 2,486 | - |

### 2.2.2 வீதவரி

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 102 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வீதவரி ரூபா 267,051 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையால் வழங்கப்படும் வசதிகள் அதிகரிக்கும் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக பெயரிடப்பட்டதால் வீதவரி திருத்தமொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2004 சனவரி 01 ஆம் திகதியின் பின்னர் 07 ஆண்டுகள் கடந்திருந்தும் வீதவரி திருத்தமொன்றினை மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 229,715 தொகையான தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 3,476,737 முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது. அதில் 2002 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிலவிய ரூபா 819,357 கட்டணம் காணப்பட்டது.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 10,243 | 10,292 | (49) | 10,788 | 9,878 | 910 |
| ஏனையவை | 4,970 | 4,602 | 368 | 5,452 | 3,972 | 1,480 |
| உப மொத்தம் | 15,213 | 14,894 | 319 | 16,240 | 13,850 | 2,390 |
| மூலதனச் செலவினம் | 11,550 | 40,617 | (29,067) | 11,000 | 7,186 | 3,814 |
| மொத்தம் | 26,763 | 55,511 | (28,748) | 27,240 | 21,036 | 6,204 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - |
| இரண்டாம் நிலைத்தரங்கள் | 16 | 15 |
| ஆரம்ப நிலைத்தரங்கள் | 14 | 13 |
| வேறு(அமைய) | - | 09 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட மனித வளங்கள்

(அ) பயன்படுத்தப்படாமலும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்டுமிருந்த ரூபா 814,150 பெறுமதியான வாகனங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2007 ஆம் ஆண்டில் தொடர்பாடல் வீட்டு செயற்திட்டத்திற்காக ரூபா 73,000 பெறுமதியான தொலைபேசிப் பட்டியல் இயந்திரம் (DIGICOM) 02 மற்றும் ரூபா 20,000 பெறுமதியான காசுப்பதிவு இயந்திரமொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2009 செப்தம்பர் 25 ஆம் திகதி முதல் இச்செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்ததால் அவ் இயந்திரங்களை எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 18,572,249 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 1,041,551 ஆக இருந்தது.

**2.5.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,574,866 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 200 ஆக இருந்தது.

**2.5.4 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 140,129 ஆக இருந்தது.

**2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

1999 முதல் 2002 வரை அறவிடப்பட்டிருந்த பொருட்கள் சேவைகள் வரி ரூபா 9,274 உம் 2010 சனவரி முதல் திசெம்பர் வரை அறவிடப்பட்டிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 6,350 ஐ உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைத்திருக்கப்பட்டிருந்தது.

**2.7 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஹோமாபொல மயானத்தைச் சுற்றி வேலியொன்றை நிர்மாணிப்பதற்காக 02 சந்தர்ப்பங்களில் ரூபா 26,475 செலவிடப்பட்டு 59 கொங்கிரீட் தூண்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 2011 மே 25 ஆம் திகதி வரையில் குறித்த செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜே.சீ.பி இயந்திரத்தைப் பயன்படுத்தி 02 கழிவுப்பொருள் குழிகளை தோன்டுவதற்காக மாவட்ட விலை நிர்ணய குழுவின் அறிக்கை விலையை கருத்திற்கொள்ளாமல் தனியார் நிறுவனமொன்றிற்கு மணித்தியால எண்ணிக்கை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்தமையால் ரூபா 16,390 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) 1999 ஆம் ஆண்டில் தேர்தல் பயிற்சி வகுப்பொன்றுக்கு சென்றதற்காக முன்னால் செயலாளருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 600 பிரயாணச் செலவினை மீளாய்வாண்டின் இறுதி வரையில் மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விபரங்களை கண்டறிய முடியாத 10 ஆண்டுகளுக்கு முன்னிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 40,150 ஆன நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ரூபா 37,500 ஆன நானாவிதக் கடன்பட்டோர் மீதி காணப்பட்ட போதிலும் அம்மீதியை அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக்கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான நிர்வாகம்

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) சொத்துக் கட்டுப்பாடு